# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்!... 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

எடப்பாடி பழனிசாமியின் பேச்சு, அறிக்கை எல்லாம் பார்த்தீர்கள் என்றால், அது அ.தி.மு.க. அலுவலகத்தில் இருந்து வந்ததா, இல்லை பி.ஜே.பி. அலுவலகத்தில் இருந்து வந்ததா என்று தெரியாத அளவுக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்ச்சிகளை எல்லாம் தாண்டிதான் இன்றைக்கு நம் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டு அரசை வழிநடத்திக்கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு திருப்பரங்குன்றம், மதுரையில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு மதக்கலவரத்தை ஏற்படுத்தி, சங்கிகள் எப்படியாவது உள்ளே நுழைந்துவிட முடியாதா என்று பல வழிகளில் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அத்தனை பேருக்கும், நாம் அத்தனை பேரும் தெளிவாக ஒரு பதில் சொல்லியாக வேண்டும். சங்கிகளின் பருப்பு ஒருபோதும் தமிழ்நாட்டில் வேகவே வேகாது. ஏனென்றால், இங்கே நடந்துகொண்டிருப்பது உங்களின் அடிமை எடப்பாடி பழனிசாமியின் ஆட்சி கிடையாது. இங்கே நடந்து கொண்டிருப்பது, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் சுயமரியாதை ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி.

**நீங்கள்தான் கழகத்தின் ரத்தநாளம்!**

நம் தலைவர் அவர்கள், இன்றைக்கு தமிழ்நாட்டின் நம்பிக்கையாக மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவின் நம்பிக்கைக்குரிய தலைவராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். பாசிச பா.ஜ.கவை களத்தில் எதிர்கொள்கிற அரசியல் பணியாக இருக்கட்டும், ஒன்றிய அரசு தரக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்ளுகின்ற அரசுப் பணிகளாக இருக்கட்டும், இரண்டிலுமே இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞரின் மறு உருவமாக நம் தலைவர் அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே, இதையெல்லாம் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். இங்கு, பூத் கமிட்டி உறுப்பினர்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள்தான் கழகத்தின் அடித்தளம். நீங்கள்தான் கழகத்தின் ரத்தநாளம். நம்மிடம் ஆழமான கொள்கைகள், நான்கரை வருட அரசின் சாதனைகள் இருக்கிறது. இதையெல்லாம் மக்களிடம் பேசுங்கள். நம் தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார். இந்த நான்கரை வருடத்தில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டிலும், தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயன்பெற்ற ஒருவராவது இருப்பார். அவர்களிடம் நம் அரசின் சாதனைகளை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

இன்றைக்கு நான் இந்தத் தொகுதியில் பேசிவிட்டு, மாலையில் விக்ரவாண்டித் தொகுதிக்குச் சென்றுவிடுவேன். அதற்குப் பிறகு, நாளைக்கு வேறு தொகுதிக்குச் சென்றுவிடுவேன். ஆனால், அடுத்த நான்கு மாத காலம் மிக மிக முக்கியம். நீங்கள்தான் இங்கு இருக்கப்போகிறீர்கள். உங்களுக்குள் பொறுப்புகளைப் பிரித்துக் கொள்ளுங்கள். இந்த இந்தத் தெருவுக்கு நான் பொறுப்பு, இந்த 10 வீட்டுக்கு நான் பொறுப்பு என்று உங்களுக்குள் பிரச்சாரப் பொறுப்பை பிரித்துக்கொள்ளுங்கள். இந்த நான்கு மாத காலம் மக்களைத் தினமும் சந்தித்து, தெருமுனைப் பிரச்சாரத்தில் ஈடுபடுங்கள். மக்களைத் தினமும் நேரடியாகச் சந்தியுங்கள். அவர்களின் பிரச்சினையைக் கேளுங்கள். அவை தீர்க்க முடிந்த பிரச்சினைகளாக இருந்தால், நிச்சயம் உங்களால் செய்து கொடுக்க முடியும். தீர்க்க முடியவில்லை என்றாலும் அவங்களுடைய பிரச்சினையைக் கேட்டீர்கள் என்றாலே, அவர்கள் மனதில் இருக்கக்கூடிய பாதிப் பாரம் நீங்கும். அவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக நீங்கள் மாறுவீர்கள்.

ஏற்கெனவே, `ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பின் கீழ், நம் உடன்பிறப்புகள் கிட்டத்தட்ட அனைத்து வீடுகளுக்கும் சென்று ஒவ்வொருத்தரையும், ஒவ்வொரு வாக்காளரையும், மக்களையும் நீங்கள் நேரடியாகச் சந்தித்திருக்கிறீர்கள். இது இன்னொரு வாய்ப்பு. நம் பிரச்சாரத்தை மக்களிடம் நேரடியாக் கொண்டுசேர்த்து, ஏன் நம் உதயசூரியன் சின்னத்திற்கு அவர்கள் வாக்களிக்க வேண்டும்? ஏன் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்? இன்னொரு முறை பா.ஜ.க. கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அடிமை ஆட்சி மீண்டும் வந்துவிட்டது என்றால், தமிழ்நாட்டை வாடகைக்குதான் முன்பு விட்டு வைத்திருந்தார்கள். இன்னொரு முறை ஆட்சிக்கு வந்தார்கள் என்றால், தமிழ்நாட்டையே பா.ஜ.கவுக்கு விற்றுவிடுவார்கள். நம் உரிமைகளை மீட்க வேண்டுமென்றால், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரவேண்டும். கழகம் ஏழாவது முறையாக ஆட்சிக்கு வரவேண்டும். நம் கழகத் தலைவர் அவர்கள், தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர வேண்டுமென்றால், இங்கு வந்திருக்கக்கூடிய கழக உடன்பிறப்புகள், நீங்கள் அடுத்த மூன்று, நான்கு மாத காலம் களத்தில் இறங்கி, உங்களுடைய பிரச்சாரப் பணிகளை இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**உடன்பிறப்புகளின் கேள்விக்கு பதில்:**

வந்திருக்கக்கூடிய நிர்வாகிகள் சிலர், கருத்துக்களை இங்கே பதியவைக்க வேண்டும் என்று இங்கே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். வளவனூர் பேரூரைச் சேர்ந்த திரு ராஜா அவர்கள், பெண்களுக்கு வேலை வாய்ப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தை அவர் சொல்லியிருக்கிறார்.

இந்தியாவில் வாழ்கின்ற மொத்த மக்களில் 6 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். ஆனால், தொழிற்சாலையில், வேலை செய்கின்ற பெண்களில் இன்றைக்கு 43 சதவிகிதம் பேர், இந்தியாவிலேயே அதிகம் பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடுதான் இருக்கிறது. அதாவது, தமிழ்நாட்டுப் பெண்கள்தான் அதிகமாக பாதுகாப்போடு இருக்கிறார்கள். 50 ஆண்டு காலம் தி.மு.க. செய்த முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றிதான் இந்த வெற்றி. வேலைவாய்ப்பில் மட்டும் இல்லாமல், இன்றைக்கு கல்வியிலும் பெண்கள் அதிகமாக சாதிப்பதும் நம் தமிழ்நாட்டில்தான். அதற்குப் பல்வேறு திட்டங்கள் சொன்னேன். `தோழிகள் விடுதி', `புதுமைப்பெண் திட்டம்', இப்படி ஏகப்பட்ட திட்டங்களை நம் அரசு செய்திருக்கிறது. திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, 32 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அதில் பெண்கள்தான் கிட்டத்தட்ட 50 சதவிகிதத்துக்கு மேல் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கோலியனூர் கிழக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த திரு எம்.ரஜினிகாந்த் அவர்கள், ஏழைகளுக்கு இலவச வீடு இன்னும் அதிக அளவில் வழங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்.

குடிசை இல்லா தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்று நம் தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கினார்கள். அந்த வாரியத்தின்மூலம் ஏழை, எளிய மக்களுக்கு கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஆரம்பித்தோம். நம் தலைவர் அவர்கள், இன்றைக்கு அந்தத் திட்டத்தைப் பெயர் மாற்றம் செய்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று உருவாக்கி, அடுக்குமாடிக் குடியிருப்புகளை ஏழைகளுக்குத் தொடர்ந்து கட்டிக்கொடுத்து வருகிறார்கள். அது மட்டுமில்லாமல், ஏழை எளிய மக்களின் வீடு என்னும் கனவை நிறைவேற்றும் விதமாக, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தின்மூலம் இன்றைக்கு ஒரு லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற இலக்கை வைத்து, இதுவரை 92,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வீடு மட்டும் இல்லாமல், ஏற்கெனவே கட்டிய வீடுகளுக்குப் பட்டாவும் நம் தலைவர் வழங்கி வருகிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டும், இந்த நான்கரை வருடத்தில் 21 லட்சம் பட்டாக்களை நம் அரசு மக்களுக்கு வழங்கி இருக்கிறது.

வளவனூர் பேரூரைச் சேர்ந்த திரு ஆ.முருகன் அவர்கள், கழக இளைஞர் அணியை வலிமையாக்க வேண்டும். சட்டமன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

இதே குறிக்கோளுடன்தான் கடந்த ஆறு ஆண்டுகளாகப் பல முயற்சிகளை நானும் செய்துகொண்டு இருக்கிறேன். உங்களுக்குத் தெரியும், இளைஞர் அணி சார்பில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, பூத் அளவில் இன்றைக்கு பொறுப்பாளர்கள், நிர்வாகிகளை நியமனம் செய்துகொண்டு இருக்கிறோம். முரசொலியில் தொடர்ந்து அறிவிப்பு வருகிறது. நேற்று, திருவண்ணாமலையில் ஒரு ஆய்வு செய்துவிட்டு வந்திருக்கிறோம். வட மாவட்டங்களுக்கு எல்லாம் சேர்த்து நிர்வாகிகள் சந்திப்பு, இந்தியாவிலேயே எந்த இயக்கத்திலும், எந்த அணியிலும் இல்லாதவாறு இளைஞர் அணியில் நிர்வாகிகள் மட்டும் கிட்டத்தட்ட 5 லட்சம் பேரை நாம் நியமித்திருக்கி றோம். அவர்கள் அத்தனை பேருக்கும் நம் கழகத் தலைவருடன் ஒரு சந்திப்பு வைக்க வேண்டும் என்று ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்கான அறிவிப்பும் நேற்று தலைவர் வெளியிட்டு இருக்கிறார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை, வருகிற 14 ஆம் தேதி திருவண்ணாமலையில் மிகப்பெரிய ஒரு மாநாடு போல அந்த சந்திப்பு நடக்க இருக்கிறது. அதற்கு, இங்கு இருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்களை எல்லாம், நிர்வாகிகள் அத்தனை பேரையும் நீங்கள் அழைத்து வரவேண்டும். உங்கள் அத்தனை பேரையும் இந்த நேரத்தில், அந்த சந்திப்புக்கு நீங்கள் வரவேண்டும் என்று உங்களை எல்லாம் நான் வரவேற்கிறேன்.

அதேமாதிரி, நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று தலைவர் அவர்களிடத்தில் நான் அடிக்கடி சொல்வதுண்டு. நிச்சயம் அந்த வாய்ப்பு உரிய நேரத்தில் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டு, இன்னும் நமக்கு கைகளில் இருப்பது நான்கு மாதங்கள்தான். எனவே, இப்போதே களப்பணியைத் தொடங்குங்கள். நம் தலைவர் அவர்கள், நமக்கு ஒரு இலக்கு கொடுத்திருக்கிறார்கள். “வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு.” நிச்சயம் நாம் களத்தில் சரியாகப் பணியாற்றினோம் என்றால், நம் பிரச்சாரப் பணியைச் சரியாகச் செய்தோம் என்றால், 200 இல்லை, 200க்கும் அதிகமான தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழக அணி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிச்சயமாக வெற்றி பெறும். அதற்கான தொடக்கமாக இன்றைக்கு இந்த விழுப்புரம் தொகுதி இருக்க வேண்டும். தமிழ்நாட்டிலேயே அதிகமான வாக்கு வித்தியாசத்தில் இந்த விழுப்புரம் தொகுதி வெற்றியை நீங்கள் உருவாக்கிக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, “வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு”

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**கலந்துகொண்டோர்:**

கழக துணைப் பொதுச்செயலாளர் பொன்முடி, மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான லட்சுமணன், மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள், ஜனகராஜ், கண்ணப்பன், மாரிமுத்து, பிரேமா, தயா இளந்திரையன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் புஷ்பராஜ், தொகுதி பார்வையாளர் துரை கி.சரவணன், கழக இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தெய்வ சிகாமணி, முருகவேல், சந்திரன், பி.ஜி. பிரபாகரன், கே.என். பி.ராஜா, நகர கழகச் செயலாளர்கள் சக்கரை, வெற்றிவேல், பேரூர் கழகச் செயலாளர் ஜீவா, பொதுக்குழு உறுப்பினர்கள் பஞ்சநாதம், சம்பத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தினகரன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் வினோத், கபாலீஸ்வரன், வெங்கடேசன், செல்வி, விஸ்வநாதன், தவமணி, புகழ் செல்வகுமார், பிரேம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ராஜவேல், கலைவாணன், ஏ.சி.கே.பிரேம், தேவேந்திரன், வை.வீராசாமி, ஒன்றியக்குழு தலைவர்கள் சச்சிதானந்தம், ஆர்.எஸ். வாசன், நகர் மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி, பேரூராட்சித் தலைவர் மீனாட்சி மற்றும் பலர் பங்கேற்றனர்.

---

‘திராவிட மாடல்’ அரசு அளித்த ஊக்கம்!

# ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத் (UPSC) தேர்வில் வரலாறு காணாத சாதனை!




ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UNION PUBLIC SERVICE COMMISSION) ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு நிறுவனமாகும். வெவ்வேறு அரசின் பணிகளுக்கு நியமனம் செய்ய தேர்வுகள் நடத்துவது இந்நிறுவனத்தின் முக்கியப் பணியாகும். குறிப்பாக, இந்திய ஆட்சிப்பணிகள் (IAS), இந்திய வெளிநாட்டுப் பணிகள்(IFS), இந்திய காவல்துறைப் பணிகள் (IPS) ஆகிய பணிகளுக்கான தேர்வுகளை நடத்துவது வழக்கமாகும். இத்தேர்வுகள் மூன்று நிலைத் தேர்வுகளாக நடத்தப்படுகின்றன. முதல் நிலைத் தேர்வு, முக்கியத் தேர்வு மற்றும் நேர்காணல் தேர்வு என்று மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் நாடு முழுவதிலுமிலிருந்து பல இலட்சம் மாணவர்கள் முதல்நிலைத் தேர்வினை எழுதி வருகின்றனர்.

தமிழ்நாட்டிலிருந்தும் மாணவ மாணவிகள் பல ஆயிரம் பேர் வருடந்தோறும் யு.பி.எஸ்.சி. தேர்வினை ஆர்வத்துடன் எழுதி வருகின்றனர். ஆனாலும் கடந்த பத்து ஆண்டுகளாக மிகக் குறைந்த அளவிலான மாணவர்களே முதல் நிலைத் தேர்வில் வெற்றிபெற்றுள்ளனர். இது மிகுந்த கவலைக்குரிய நிலைமையாகக் கருதப்பட்டது. அதே தருவாயில், தமிழ்நாட்டில், பள்ளிப்படிப்பை முடித்து, உயர்கல்விக்குச் செல்பவர்கள் சதவிகிதம் (GROSS ENROLLMENT RATE-GER) இந்திய அளவில் 27.1% இருக்கும் தருவாயில், இந்தியாவிலேயே மிக அதிகமாக 51.4 சதவிகிதமாக உயர்த்திருந்தும், இந்தியக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் தமிழக உயர்கல்வி நிறுவனங்கள் முதல் 50 இடங்களில் இருந்தும், கல்விக்காகவும், பயிற்சிக்காகவும் நிதி ஒதுக்கீடுகள் இருந்தும் கடந்த அ.தி.மு.க ஆட்சியாளர்கள் காலத்தில், யு.பி.எஸ்.சி. யில் தேர்ச்சி பெற்ற தமிழக மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது.

குறிப்பாக 2016-17 வருடத்தில் அதிகபட்சமாக 27 மாணவர்களே தேர்ச்சி பெற்றனர். பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், கடைசி மாநிலமாகத்தான் மாணவர்களின் வெற்றி இருந்தது. தமிழகக் கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகமின்மையினை ஏற்படுத்தியது.

**முனைவர் க.திருவாசகம்**
முன்னாள் துணைவேந்தர் :
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்
சென்னை பல்கலைக்கழகம், சென்னை
அமெட் பல்கலைக்கழகம், சென்னை



இந்நிலையினை ஆராய்ந்து உணர்ந்த திராவிட மாடல் அரசு மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மற்றும் ஆளுமை மேம்பாட்டுத்துறையின் (SKILL DEVELOPMENT) அமைச்சர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எடுத்த சிறப்பு மற்றும் சிறந்த நடவடிக்கைகளால், யு.பி.எஸ்.சி. தேர்வில் தமிழக மாணவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வந்துள்ளது. யு.பி.எஸ்.சி. முதல்நிலை தேர்வில் (PRELIMINARY EXAM) 2021ஆம் ஆண்டு 234, 2022ல் 403, 2023ல் 585, 2024ல் 632, 2025ல் 732 மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

நாடு முழுவதும் 14,161 பேர் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற நிலையில், தமிழ்நாடு மட்டும் 4.94% தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். 2025 ஆம் ஆண்டு முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற 732 பேரில் 315 (40.2%) மாணவ மாணவியர்கள் தமிழக அரசின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சியும் பயனும் பெற்றவர்கள் ஆவர்.

யு.பி.எஸ்.சி.யின் முதன்மைத் தேர்வில் (MAIN EXAM) 2024 ஆம் ஆண்டு 136 பேர், 2025ஆம் ஆண்டில் 155 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று, தமிழ்நாட்டின் வரலாற்றில் அதிக அளவில் வெற்றி பெற்றுள்ளனர். இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், இந்த ஆண்டு, 2025ல் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 155 பேரில், 87 பேர் (56.13%) மாநில அரசின் AICSCC (ALL INDIA CIVIL SERVICE COACHING CENTRE) பயிற்சி மையத்தில் பயின்றவர்கள். இம்மையத்தின் தேர்ச்சி விகிதம் கடந்த ஆண்டில் சுமார் 35% இருந்த நிலையில், இந்த ஆண்டு, அது 77% ஆக உயர்ந்துள்ளது. இது மிகப்பெரிய முன்னேற்றமாகும்.

இறுதித் தேர்வான நேர்காணலில், 2024-25 ஆம் ஆண்டு 57 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று IAS, IFS, IPS மற்றும் நடுவண் அரசின் 24 பதவிகளுக்கு நியமனம் பெறத் தகுதி பெற்றுள்ளனர். முந்தைய ஆண்டுகளில் அதிகபட்சமாக 35 பேர் மட்டுமே தகுதி பெற்ற நிலையில், இந்த ஆண்டு 55 ஆக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வெற்றியின் பின்னணியில், தமிழக அரசின் திட்டமிட்ட செயல்திட்டங்களே முக்கியக் காரணம். தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை 2024-25னை 24 ஏப்ரல் 2025ல் சமர்ப்பித்தபோது, முதல்வர் அவர்கள், தம் உரையில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் வருடத்திற்கு 1000 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, யு.பி.எஸ்.சி. தேர்விற்கான தயாரிப்பிற்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்று தெரிவித்தார்கள். அத்துடன் ரூ.40 கோடி மதிப்பீட்டில், மிக நவீன வசதிகளுடன் கூடியதும், வருடத்திற்கு 500 மாணவ மாணவியருக்கு போட்டி தேர்விற்கு பயிற்சி அளிக்க, ஒரு பயிற்சி கூடம் தங்கும் இடம், நூல்நிலையம், சென்னையில் அண்ணாநகரில் உள்ள செனாய் நகரில் கட்டப்படும் என்று கூறினார்கள். அதன் விளைவாகவே, நான் முதல்வன் திட்டம் மற்றும் AICSCC மூலம் தீவிர பயிற்சிகள் அளிக்கப்பட்டு, பெரும் அளவில் மாணவர்கள் தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

**நான் முதல்வன் திட்டம்:**

மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை, சிறப்பு பயிற்சி, மற்றும் நேர்காணல் தயாரிப்பிற்கான நிதி உதவி தமிழக அரசால் வழங்கப்படுகின்றது. முதல்நிலை தேர்விற்கு (PREMILINARY EXAM) தயாராகும் மாணவர்களுக்கு மாதம் ரூ.7000மும், முக்கிய நிலைத்தேர்விற்கு (MAIN EXAM) மாணவருக்கு மாதம் ரூ.25,000மும், நேர்காணலுக்கு (INTERVIEW) தயாராகும் மாணவர்களுக்கு மாதம் ரூ.50,000 உதவித்தொகை (SCHOLARSHIP) வழங்கப்படுகின்றது.

**தமிழ்நாட்டின் அரசுப் பயிற்சி மையம் (AICSCC):**

தமிழ்நாட்டின் அரசுப் பயிற்சி மையத்தில், தங்குமிடத்துடன் கூடிய பயிற்சி (RESIDENTIAL COACHING), கட்டுப்பாடான படிப்பு சூழல், மாதிரித் தேர்வுகள் நடத்துதல் (MOCK TEST) மற்றும் நேர்காணல் பயிற்சி வகுப்புகள் (INTERVIEW TRAINING) நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் 225 இடமே இருந்த நிலையில், கூடுதலாக மாணவர்களுக்கு இடமளித்து, பயிற்சி வழங்கும் திறன் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சாதனை தந்த தாக்கம்:

- யு.பி.எஸ்.சி. வாய்ப்புகளில் இனி செல்வந்தர்களுக்கு மட்டும் அல்ல, முதல் தலைமுறை மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள், ஏழை எளிய மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் வாய்ப்புகளும், வசதிகளும் அளிப்பதன் மூலம் திராவிட மாடல் அரசால், சமூகத்தில் ஒரு சமத்துவப் புரட்சியினை உருவாக்க முடிகின்றது.
- அரசு தனிக்கவனம் செலுத்தி, திட்டமிட்டு, நிதி ஆதாரம் அளித்து உதவினால், போட்டித் தேர்வுகளில் ஜனநாயகமான அணுகுமுறையினை உருவாக்க முடியும் என்பதை திராவிட மாடல் அரசு நிரூபித்துள்ளது.
- மாநிலத்தில் தேசிய நிர்வாகத்தின் பங்கு அதிகரித்துள்ளது.
- தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் கண்ட கனவான சமத்துவம், சமூக நீதி, சமூக, பொருளாதார மேம்பாடு நிறை வேற்றப்படுகின்றது.
- வரும் ஆண்டுகளில் யு.பி.எஸ்.சி. பயிற்சி மையங்களின் எண்ணிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு, பிற மாவட்டங்களிலும் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- பொருளாதாரரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு ஊக்கத்தொகையினை உயர்த்தி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- வெற்றி பெற்ற மாணவர்களின் பயிற்சி மற்றும் தேர்வு அனுபவங்களை, தேர்வுகள் மற்றும் நேர்காணல்களுக்கு தயாராகும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் PEER-MENTORING முறை அமுல்படுத்தப்படவுள்ளது.

தமிழக அரசின் திறம்பட்ட நடவடிக்கைகள், திட்டமிட்ட செயலாக்கம், தேவையான நிதி ஒதுக்கீடு காரணமாக யு.பி.எஸ்.சி. தேர்ச்சி எண்ணிக்கையில் தமிழ்நாடு ஒரு புதிய உயரத்தை நோக்கி செல்லும் என்பது திண்ணம்.

---

தருமபுரி மாவட்டத்தில்

# தொழிற்பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தின் அமலாக்கம் - செயல்பாடுகள் என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, டிச. 9 -

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு பிரதான் மந்திரி தேசிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறதா? தமிழ்நாட்டில் தொழில் பயிற்சி ஊக்குவிப்பு திட்டதினையும் (NAPS) அதன் முக்கிய நோக்கங்கள், கூறுகளையும் செயல்படுத்தி உள்ளதா? குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் பிரதான் மந்திரி தேசிய திட்டத்தினை எவ்வாறு ஒன்றிய அரசு செயல்படுத்தி உள்ளது?



தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் மாவட்ட வாரியாக புள்ளிவிபரங்களு டன் தொழில்பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தின் (NAPS) கீழ் சேர்ந்து பயிற்சி பெற்று, சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள பயிற்சியாளர்களின் எண்ணிக்கை என்ன?

தருமபுரி மாவட்டத்தில் தொழில்பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தின் (NAPS)கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில்கள், சிறு, குறு, மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME),உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை என்ன? கடந்த 5 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் இதுவரை தருமபுரி மாவட்டத்தில் அந்நிறுவன முதலாளிகளுக்கு திருப்பி வழங்கப்பட்டுள்ள உதவிதொகையின் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராமப்புற, பழங்குடியின,மற்றும் பின்தங்கிய பகுதிகளில் தொழில் கல்வி ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், உள்ளூர் தொழில் முனைவோரிடையே இத்திட்டம் குறித்த விழுப்புணர்வை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பு பயிற்சி மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

என்று நாடாளுமன்றத்தில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சர் ஜெயந்த் சௌத்ரியிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

---

# சிவகங்கையில் ரூ.2 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட பேருந்து நிலையம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

*சிவகங்கை, டிச. 9 -*

சிவகங்கை மாவட்டம் சிவகங்கைநகரில் ராணி ரெங்கநாச்சியார் பேருந்து நிலையம் உள்ளது . மிகவும் பழமையாக உள்ள இந்த பேருந்து நிலையத்தை புதுப்பித்து கட்டுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் ப.சிதம்பரம் ,கார்த்தி ப.சிதம்பரம் ஆகியோர் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ருபாய் 2கோடி நிதி ஒதுக்கீடு செய்தார்கள் . இந்த நிதியின் கீழ் நவீன வடிவில் பேருந்து நிலையம் புதுப்பிக்கப்பட்டுசி.சி.டி.வி . கேமரா மற்றும் கழிவறை வசதியுடன் புதுப்பிக்கப் பட்டுள்ளது. இந்த புதுப்பிக்கப்பட்ட பேருந்து நிலைய திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம். துரை.ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது.

புதுப்பிக்கப்பட்ட பேருந்து நிலையத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் கார்த்தி சிதம்பரம் எம்.பி. எம்.எல். ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ் .மாங்குடி, திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த. சேங்கைமாறன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார். முன்னதாக நகராட்சி ஆணையர் அசோக்குமார் வரவேற்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. வி.ராஜசேகரன்,மாநில காங்கிரஸ் பொதுச்செயலாளர் பச்சேரி சி.ஆர். சுந்தரராசன், நகர்மன்ற உறுப்பினர்கள் வீனஸ் ராமநாதன் ,அ. அயூப் கான், ஜெயகாந்தன், சி. எல். சரவணன், விஜய தியாகராஜன் ,பிரியங்கா,சுரேஸ், ஒன்றிய செயலாளர் கள் திருமலை முத்துராமலிங்கம், எம் .ஜெயராமன் ,ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துக்குமார் , மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி, லட்சுமனன் மற்றும் காங்கிரஸ் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.